**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE DISTRICT MUNSIF, DISTRICT MUNSIF COURT**
**PATTUKKOTTAI**

**O.S :24/2014**
**Date: 09.11.2021**
**Deposition of witness for : PW3 Chief Examination**
**Name: Viswanathan, S/o.Balraj**
**Village Administrative Officer, Edayathi North Village**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 9th day of November 21**

**வா.சா.3 முதல் விசாரணை**

எடையாத்தி வடக்கு கிராம புல எண் 70/4ஏ-ன் மொத்த விஸ்தீரணம் 9.5 ஏர்ஸ். மேற்படி புல எண்ணில் யார் யார் பட்டாதாரர்கள் என்றால் பொட்டுக்கோனார் மகன் ரெங்கசாமி, கருப்பக்கோனார் மக்கள் சிதம்பரம், ரெங்கசாமி,ராமகோனார் மகன் பெரியதம்பி.மேற்படி பட்டா எண்.2738. எடையாத்தி வடக்கு கிராம புல எண். 70/4 பி -யின் மொத்த விஸ்தீரணம் 4 ஏர்ஸ். மேற்படி புல எண்ணின் பட்டாதாரர்கள் யார் என்றால் பொட்டுக்கோனார் மகன் ரெங்கசாமி, கருப்பக்கோனார் மக்கள் சிதம்பரம், ரெங்கசாமி. பட்டா எண். 1975. எந்த ஆவணத்தை வைத்து நான் சொல்கிறேன் என்றால் நத்தம் சிட்டா அடிப்படையில். எடையாத்தி வடக்கு மனை சிட்டா கணக்கு எண். 10 I புத்தகத்தின் பிரதி நகல் மற்றும் அ பதிவேட்டின் நகல் Ex.X1 ஆக அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டு குறியீடு செய்யப்படுகிறது.

**7,11ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

புல எண். 70/4 ஏ, 70/4 பி இரண்டு அயிட்ட சொத்துக்களும் மனைக்கட்டு என்றால் சரிதான். மேற்படி புல எண்களில் தற்சமயம் குடியிருப்பு வீடுகள் உள்ளதா என்றால் 70/4 பி-யில் ஓட்டு வீடும், 70/4 ஏ- யில் ஓட்டு வீடு மற்றும் பேப்பர் தயாரிக்கும் தொழிற்சாலை உள்ளது. 70/4ஏ, 70/4 பி க்கும் இடையே வரப்பு எதுவும் உள்ளதா என்றால் 70/4 ஏ -ல் உள்ள ஓட்டு வீட்டிற்கும் தொழிற்சாலைக்கும் இடையே கம்பி வேலி உள்ளது, 70/4 பி, 70/4 ஏ-க்கும் இடையே அத்து வரப்பு இல்லை. என் மூலம் குறியீடு செய்யப்பட்ட Ex.X1 நத்தம் மனைச்சிட்டா என்றால் சரிதான். மேற்படி ஆவணம் எந்த ஆண்டுக்கு பின்னிட்டு தயார் செய்யப்பட்ட பதிவேடு என்றால் யூ.டி.ஆர் பதிவுக்கு பின் சுமார் 1986 லிருந்து 1990க்குள் இருக்கும். மேற்படி புல எண்கள் நத்தம் மனை பகுதிகளாக பிரிப்பதற்கு முன்பு உள்ள ஆவணங்கள் உள்ளதா என்றால் உள்ளது நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் அ பதிவேடு உள்ளது. நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் அ பதிவேட்டில் 70/4 ஏ யார் பெயரில் இருந்தது என்றால் பொ.ரெங்கசாமி , க.ரெங்கசாமி, க.சிதம்பர கோனார் ஆகியோர் பெயரில் ஆவணம் உள்ளது. 70/4 பி யார் பெயரில் உள்ளது என்றால்

copy

க.குப்புசாமி, பெ.ரெங்கசோனார் ஆகியோர் பெயரில் உள்ளது. கிராம நிர்வாக அலுவலகத்தில் உள்ள கணக்குகளில் ஆர்.எஸ்.ஆர், ஆர்.ஓ.ஆர் ஆவணங்கள் உள்ளதா என்றால் இல்லை. மேற்படி ஆர்.எஸ்.ஆர், ஆர்.ஓ.ஆர் ஆவணங்கள் யார் பெயரில் இருந்தன என்றால் அதுகுறித்த ஆவணங்கள் அலுவலகத்தில் இல்லாத காரணத்தால் அது குறித்து கூற இயலாது. நத்தம் மனை பட்டா எதன் அடிப்படையில் அவர்கள் பெயரில் மாற்றப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது.

**12,13ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

நத்தம் மனை சிட்டா ஆவணம் எதன் அடிப்படையில் ஏற்பட்டது என்பது குறித்த விவரம் Ex.X1 ஆவணத்தில் உள்ளதா என்றால் இல்லை. அது குறித்த விவரம் நான் கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. நத்தம் மனை சிட்டா ஆவணங்களுக்கு முந்தைய ஆவணங்களான ஆர்.ஓ.ஆர், ஆர்.எஸ்.ஆர் பதிவேட்டில் Ex.X1 ல் கண்ட நபர்கள் பெயர்கள் இல்லாமல் வேறு நபர்கள் பெயர் இருக்க வாய்ப்பு உள்ளதா என்றால் இருக்கலாம். புல எண். 70/4 ஏ, மற்றும் 70/4பி யில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. 70/4 ஏ யில் பொ.ரெங்கசாமி கோனார் வாரிசுகள் குடியிருக்கிறார். 70/4 பி -யில் கருப்ப கோனார் மக்கள் குப்புசாமி, ரெங்கசாமி குடியிருக்கிறார். புல 70/4 ஏ யில் பேப்பர் தொழிற்சாலை உள்ளது என்றால் சரிதான்.

7,8,12,13ம் பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடிந்த பின்னிட்டு வாதி தரப்பில் சாட்சியை மீண்டும் விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதன் பேரில்

**வாதி தரப்பு மறு விசாரணை**

70/4 ஏ -யில் பேப்பர் தொழிற்சாலை உள்ளது என்பதற்கு Ex.X1 ஆவணத்தில் எந்தவிதமான எழுத்து பூர்வமான பதிவும் இல்லை என்றால் சரிதான்.

*Sd/-Viswanathan*
*Taken down by the typist under my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
*by him/her to be Correct.*

Sd/-P.Rangeswri
District Munsif, Pattukkottai

Copy